Cr. Mis.39(Eng) 663697 – 11 – 2- 70

**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXV CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
III ADDL. DIST. COURT, TIRUVALLUR AT POONAMALLEE.

SESSIONS CASE NO.16/2025

Deposition of PW2

| | | | |
|---|---|---|---|
| Name | : மணிவண்ணன் | Village | : |
| Father's / Husband's Name | : முருகேசன் | Calling | : |
| Age | : | Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the 12th day of February 2026.

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தற்போது A/1. போலிஸ் குவாட்டர்ஸ், முருகப்பா பாலிடெக்னிக் அருகில் வசிக்கின்றேன். இந்த வழக்கு சம்பவத்தில் இறந்துபோன குணசேகரன் என்னுடைய சகலை. அவருடைய மனைவி பெயர் சரஸ்வதி. சரஸ்வதியுடன் பிறந்தவர்கள் ஆஜர் எதிரி கணேசன், அக்கா கலைவாணி, என்னுடைய மனைவி ஜெயலட்சுமி. நான் போலிஸ் கேம்பில் சிகை அலங்காரம் செய்யும் வேலை செய்து வருகின்றேன். இறந்துபோன குணசேகரன் துணி வியாபாரம் செய்து வந்தார். கடந்த 27.05.2024 அன்று மாலை 4.45 மணியளவில் நான் கேம்பிற்கு போக என்னுடைய மாமனாரை பார்த்துவிட்டு போகலாம் என்று என்னுடைய மாமனார் வீட்டிற்கு போனேன். அங்கு என்னுடைய சகலை ரத்த வெள்ளத்தில் மல்லாக்க கிடந்தார். அவரது தலையின் பின்புறமாக ரத்தம் வந்து கொண்டிருந்தது. என்னுடைய மைத்துனர் கணேசன் கம்போடு நின்றிருந்தார். அதன்பிறகு பக்கத்தில் இருந்தவர்களுக்கு போன் மூலம் தகவல் சொன்னேன். அவர் சரஸ்வதிக்கு போன் மூலம் தகவல் சொன்னார். அதன்பிறகு சரஸ்வதி, கலைவாணி ஆகியோர் அந்த இடத்திற்கு வந்தார்கள். அதன்பிறகு ஆம்புலன்சுக்கு போன் செய்தோம். அவர்கள் வந்து பார்த்துவிட்டு இறந்து விட்டார் என்று சொன்னார்கள். குணசேகரனின்

மனைவி சரஸ்வதி புகார் கொடுத்தார். போலிஸ் என்னை விசாரித்துக் கொண்டார்கள். போலிசார் என்னை விசாரித்தபொழுது என்னுடைய மச்சான் கணேசனுக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளித்தது சம்மந்தமான நோட்டை கொடுத்தேன். இந்த நோட்டை என்னுடைய மாமனார் வீட்டில் இருந்து எடுத்துக்கொடுத்தேன். அந்த நோட்டு **அ.த.சா.ஆ.2**. அந்த நோட்டை கொடுக்கும்பொழுது என்னை போலிசில் விசாரித்துக் கொண்டார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிஸ் துறையில் நான் 24 ஆண்டுகளாக பணிபுரிந்து வருகின்றேன். காவல் துறையில் என்னுடைய பணி காலை 8 மணிமுதல் மாலை 7 மணி வரை. அன்றைய தினம் எனக்கு வேலை நாள் தான். வேலை அதிகமாக இருந்ததால் 3 மணிக்கு வந்து சாப்பிட்டு விட்டு வேலைக்கு திரும்பும்பொழுது மாமனார் வீட்டிற்கு சென்றேன். போலிசில் என்னை விசாரிக்கும்பொழுது இந்த விவரத்தை நான் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரி கணேசன் எனது சகலை குணசேகரனை கம்பு வைத்து அடித்ததை நான் நேரடியாக பார்க்கவில்லை. எதிரி கணேசன் புத்தி சுவாதீனம் இல்லாதவர் என்றால் சரிதான். போலிசில் என்னை 2 நாட்கள் கூப்பிட்டார்கள். இறந்துபோன குணசேகரனுக்கு குடிப்பழக்கம் உண்டு என்றால் சரிதான். சம்பவதன்று இறந்துபோன குணசேகரன் அதிகமாக குடித்துவிட்டு குடிபோதையில் மல்லாக்க அவராகவே விழுந்து அவருக்கு காயம் ஏற்பட்டது என்றால் அதனை நான் பார்க்கவில்லை. நான் காவல் துறையில் பணிபுரிவதால் காவல் துறைக்கு சாதகமாக பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. இறந்துபோனவர் என்னுடைய சகலை என்பதால் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**